# மெய்யான விடுதலையின் சிறந்த வார்த்தை




## 2.10 இந்த விடுதலை

**வேத வசனம்:** **ஆகையால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள். பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்.**

*யாக்கோபு 4:7*

**அறிக்கை:** **நான் தேவனுக்குக் கீழ்ப்படியும்போது எனக்கு அவருடைய வல்லமையும் மிகுந்த சந்தோஷமும் கிடைக்கும்.**

**சத்தியம்:** ஒருவன் சத்தியத்தை அறிந்தால் சத்தியம் அவனை விடுதலையாக்கும். ஏனென்றால் நம்மை விடுதலையாக்குகிற குமாரன் விடுதலையாக இருக்கிறார்.



### வேத பகுதி: யோவான் 8:30-36

**பாடம்**

**1. உண்மையான விடுதலை மற்றும் பொய்யான விடுதலை:** விடுதலை என்பது எந்த கட்டுப்பாடுகளையும், தடைகளையும் மீறுவது என்பது இல்லை. அல்லது நம்முடைய விருப்பம்போல எதையும் செய்யலாம் என்பதும் இல்லை. பெற்றோரிடமிருந்து விடுதலை, ஆசிரியரின் கட்டளைகளிலிருந்து விடுதலை என்பதோ அல்லது அரசாங்கத்தின் சட்டதிட்டங்களிலிருந்து விடுதலை என்பதோ இல்லை. அவைகள் நியாயமற்றவை என்று வேதாகமம் குறிப்பிடுகிறது. அது தேவனற்ற செயல். ஒருவர் நியாயமற்ற சிந்தை கொண்டிருப்பானென்றால் அவன் தேவனை விரோதிப்பவனாகவே இருப்பான். அது ஒருவேளை அவனுக்கு குறுகியகால மகிழ்ச்சியைக் கொடுத்தாலும் இறுதியில் அது ஆபத்திலும் வேதனையிலும் அவனைக்கொண்டுபோய் சேர்க்கும். (மத்தேயு 24:12)

**2. உண்மையான விடுதலை:** உண்மையான விடுதலை தேவனிடமிருந்து வருகிறது. ஏனென்றால் வேதம் சொல்லுகிறது, “குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்”. மெய்யான விடுதலை மகிழ்ச்சியையும் ஆசீர்வாதத்தையும் கொண்டுவருகிறது. (யோவான் 8:36)

**3. தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிதல்:** தேவனுக்கு ஆம் என்று சொல்லுவதே மெய்யான விடுதலை மற்றும் மகிழ்ச்சியின் இரகசியம். தேவனுடைய வார்த்தைச் சொல்லுகிறது, “பிள்ளைகளே, உங்கள் பெற்றாருக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படியுங்கள். இது கர்த்தருக்குப் பிரியமானது”. நாம் நம்முடைய பெற்றோருக்கு கீழ்ப்படியவேண்டும் என்று முடிவு செய்யும்போது அதைச் செய்யும்படி தேவன் உதவிச்செய்கிறார். பிற்பாடு சரியானவைகளைச் செய்வதற்கும் தவறானவைகளை செய்யாமலிருப்பதற்கும் நமக்கு சுதந்திரம் உண்டு. (கொலோ. 3:20)

**4. மிகுந்த சந்தோஷமும் மகிழ்ச்சியும்:** தேவனுக்குக் கீழ்ப்படிவது விசேஷித்த மகிழ்ச்சியை கொண்டுவரும். இந்த மகிழ்ச்சியே நம்முடைய பெலன். “விசாரப்பட வேண்டாம். கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்களுடைய பெலன்” என்று தேவனுடைய வார்த்தைச் சொல்லுகிறது. இப்படியாக நம்மிடமிருக்கும் தேவமகிழ்ச்சியானது நாம் தேவனைக் கனப்படுத்தும் செயல்களைச் செய்யவும் தேவனுடைய வார்த்தைக்கு நம்மை அற்பணிக்கவும் உதவி செய்கிறது. இது, <கர்த்தருக்குக் கீழ்ப்படிதல்> மற்றும் <பெரிய மகிழ்ச்சி, வல்லமை> ஆவிய இரண்டுக்கும் இடையில் ஒரு வலுவான பிணைப்பை உருவாக்குகிறது. (நேகேமியா 8:10)

**முடிவுரை:** தேவன் மகிழ்ச்சியையும் சுதந்திரத்தையும் தர விரும்புகிறார், இயேசு கிறிஸ்து சிலுவையில் மரித்ததால் நாம் விடுதலையாகிறோம். நாம் நம்மை தேவனிடம் ஒப்புகொடுக்கும்போது நாம் பெலமுள்ளவர்களாகவும், மகிழ்ச்சியான கிறிஸ்தவர்களாகவும் மாறுகிறோம்.

**ஜெபம் / அழைப்பு:** இன்றைய சத்தியம் நமது இருதயங்களில் எழுதப்படும்படி இயேசுவின் நாமத்தினால் ஜெபியுங்கள்.